(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No.122/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | அய்யம்மாள் |
| த/பெ | : | நடராஜன் |
| கிராமம் | : | இளையநயினார் குளம் |
| வட்டம் | : | ராதாபுரம் |
| சாதி | : | தேவர் |
| அழைத்தல் | : | டெய்லர் |
| மதம் | : | இந்து |
| வயது | : | 22 |

2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது இளையநயினார் குளத்தில் வசித்து வருகிறேன். நான் டெய்லராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 என் அம்மா, அ.சா.2 என்னுடைய சகோதரி ஆவார்.

2) தற்போது வருடம், தேதி, மாதம் நினைவில் இல்லை. நான் ஒரு நாள் வள்ளியூர் பெரியம்மாள் வீட்டில் இருந்த போது ராதாபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து அழைத்து என் தாயாரை ஆசாரிப்பள்ளம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்க வருமாறு என்னை அழைத்தார்கள். நானும், என் பெரியம்மாள் இசக்கியம்மாளும் மருத்துவமனைக்கு சென்று என் அம்மாவை பார்த்தோம். அவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். அவரை ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். வழக்கு சம்பவம் பற்றி என்னுடைய அம்மா எதுவும் கூறவில்லை. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை )

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 30-04-2016 அன்று காலை 6.30 மணி அளவில் எதிரி எங்கள் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்து என்னுடைய இடத்தை விட்டு கொடு என கூறி என் அம்மாவை பார்த்து அசிங்கமாக ஏசி, அடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டார் என்றும், வெளியே கிடந்த உடன்கம்பை எடுத்து என் அம்மாவின் வலது கை புஜத்தில் அடித்து ஊமை காயத்தை ஏற்படுத்தினார், என்றும், காதில் ரத்தகாயம் ஏற்படுத்தினார் என்றும், சம்பவத்தை பார்த்த நானும் என்னுடைய சகோதரியும் சத்தம் போடவே எதிரி என் அம்மாவை பார்த்து கொலை மிரட்டல் விடுத்து சென்றார் என்றும், என் அம்மாவை மருத்துவமனைக்கு சேர்த்து அங்கு இருந்து ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருவதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை

(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.122/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 6

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமலட்சுமி |
| க/பெ | : | சுப்பையா கோனார் |
| கிராமம் | : | இளையநயினார் குளம் |
| வட்டம் | : | ராதாபுரம் |
| சாதி | : | கோனார் |
| அழைத்தல் | : | கூலி |
| மதம் | : | இந்து |
| வயது | : | 52 |

2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை** :–

நான் தற்போது இளையநயினார் குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 அ.சா.2 யை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை )

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 03-05-2016 அன்று காலை 1.30 மணிக்கு இளையநயினார் குளம் தெக்குலூர் உள்ள சம்பவ இடத்தை காவல் உதவி ஆய்வாளர் என் முன்பும், சாட்சி முத்து செல்வன் முன்பும் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை

(ஓம்)/– மு. ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ராதாபுரம்.